**இலங்கை அதிபர் சேவையின் வருடாந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பம் கோரல் - 2025 இணையவழி முறை மூலமாகச் செயற்படுத்துதல்**

1. 2025 ஆம் ஆண்டிற்கான கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்டுள்ள இணையவழி விண்ணப்பங்கள் மூலம் மட்டுமே வருடாந்த இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டியது கட்டாயமாகும்.
2. இணையவழி விண்ணப்பப் படிவத்திற்குள் நுழைவதற்காக https://nspt.moe.gov.lk எனும் இணைப்பினைப் பயன்படுத்தவும்.
3. இணையவழி விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்குரிய ஆலோசனை வழிகாட்டி https://nspt.moe.gov.lk எனும் இணைப்பில் தரப்பட்டுள்ளது.
4. விண்ணப்பப் படிவம் அனுப்புவதற்குரிய காலப்பகுதி 2025.03.01 திகதி தொடக்கம் 2025.03.14 திகதி வரையாகும். விண்ணப்பப் படிவம் ஆங்கில மொழியில் மாத்திரம் நிரப்புதல் வேண்டும்.
5. இணையவழியில் பூர்த்தி செய்யப்பட்ட வருடாந்த இடமாற்ற விண்ணப்பத்தின் அச்சிடப்பட்ட பிரதியை சரியாக உறுதிப்படுத்தி ஸ்கேன் (Scan) செய்ததன் பின்னர், வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக இணையவழி முறைமைக்கு பதிவேற்றம் (Upload) செய்வதன் ஊடாக கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். விண்ணப்பத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை அமைச்சுக்குப் பெறுவதற்கான இறுதித் திகதிக்கு (2025.03.25) முன்னர் உரிய இணையவழி முறைமைக்குச் சமர்ப்பிப்பதற்கு முடியுமான வகையில் உரிய காலத்தில் தமது விண்ணப்பங்களை வலயக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பிப்பது இலங்கை அதிபர் சேவை அதிகாரிகளின் பொறுப்பாகும், தனிப்பட்ட முறையில் அமைச்சுக்கு அனுப்பப்படும் இடமாற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவிப்புமின்றி நீக்கப்படும்.
6. மருத்துவ காரணங்களை முன்வைக்க வேண்டுமாயின், மருத்துவச் சான்றிதழை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இதற்கான மருத்துவச் சான்றிதழை PDF வடிவத்தில் ஸ்கேன் (Scan) செய்து முறைமைக்கு பதிவேற்றம் (Upload) செய்தல் போதுமானது. ஒன்றுக்கு மேற்பட்ட மருத்துவச் சான்றிதழ்கள் இருக்கும் பட்சத்தில் அவ் அனைத்துச் சான்றிதழ்களும் தனியான PDF கோவையாக ஸ்கேன் (Scan) செய்து முறைமைக்கு பதிவேற்றம் (Upload) செய்தல் வேண்டும். மருத்துவச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கும் போது, அங்கீகரிக்கப்பட்ட அரச மருத்துவரால் உரிய நோய் நிலைமையை உறுதிப்படுத்தி முன்வைக்கும் மருத்துவச் சான்றிதழ்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், மருந்துச் சீட்டுகள் அல்லது மருத்துவக் குறிப்புகள் மற்றும் பல்வேறு மருத்துவப் பரிசோதனை அறிக்கைகள், மருத்துவச் சான்றிதழ்களாக ஏற்றுக்கொள்ளப்படாது என்பதையும் விண்ணப்பதாரர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.
7. மேலே 6ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களைத் தவிர, வெளித் தரப்பினரின் பரிந்துரை கடிதங்களை விண்ணப்பத்துடன் இணைப்பதைத் தவிர்க்குமாறு தெரிவித்துக் கொள்கிறேன். அத்தகைய இணைப்பை அனுப்புவதால் எந்த சிறப்பு சலுகையும் கிடைக்கப்பெறாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.
8. விண்ணப்பத்தினைக் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அனுப்பப்படும் எவ்வித இணைப்புகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலதிக ஆவணங்களை கல்வி அமைச்சிற்கு அவ்வப்போது சமர்ப்பிப்பதை அதிபர் சேவை அதிகாரிகளால் செய்யப்படலாகாது.
   - விண்ணப்பங்களைச் சரியாகப் பூர்த்தி செய்தல் மற்றும் அச்சிடப்பட்ட பிரதியை முடிவுத் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பிப்பது அதிகாரிகளின் பொறுப்பாகும்.
   - கிடைக்கப்பெறும் அனைத்து விண்ணப்பங்களையும், அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் வழிகாட்டிக்கு அமைவாக அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரைகளுடன், உரிய உப ஆவணங்களுடன் முடிவுத் திகதிக்கு முன்னர் இணையவழி முறைமைக்கு பதிவேற்றம் (Upload) செய்தல் வலயக் கல்விப் பணிப்பாளரின் பொறுப்பாகும்.

9. இது தொடர்பாக ஏதேனும் சிக்கல்கள் காணப்படுமாயின் எனும் principalbranchnew@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது 0112-784827 / 0112-786252 எனும் இலக்கங்களுக்கு அறிவிக்க முடியும்.